www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| முதல் திருப்புதல் தேர்வு - 2025 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி | XII – தமிழ் | மதிப்பெண் : 90 |

பகுதி - 1

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. (14x1=14)
ii) ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்து குறியிட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கான முதன்மை ஆதாரம்
அ) தொல்காப்பியம்
ஆ) தண்டியலங்காரம்
இ) அற இலக்கியம்
ஈ) சங்க இலக்கியம்

2. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை
அ) அறவோர், துறவோர்
ஆ) திருமணமும், குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும்
ஈ) நிதியமும், சங்கமும்

3. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம்
ஆ) கணிதம்
இ) புவியியல்
ஈ) வேளாண்மை

4. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற பழமொழியை எடுத்துக்காட்டும் கதை
அ) கோடை மழை
ஆ) தலைக்குளம்
இ) முதல்கல்
ஈ) நடிகர் திலகம்

5. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு
அ) 1912 ஆ) 1712
இ) 1812 ஈ) 1821

6. நான் வெற்று வெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்ரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது
அ) தமது வீட்டு முகவரியை
ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை
ஈ) தமது படைப்புகளை

7. ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் கட்ட நேரும் தண்டத்தொகை
அ) ரூ.1000 ஆ) ரூ.2000
இ) ரூ.500 ஈ) ரூ.5000

8. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி 2 தவறு
ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு
ஈ) கூற்று 1 தவறு 2 சரி



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம்
ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை
ஈ) நிலத்தடி நீர்மட்டம் உறிஞ்சுதல்

10. இந்தியத் திரைப்படத்துறையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய இடம்
அ) மும்பை ஆ) கல்கத்தா
இ) பெங்களூர் ஈ) சென்னை

11. ***தவறான இணையைத் தேர்வு செய்க.***

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள் வெண்பா | - | திருக்குறள் |

12. உலகு என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) இடவாகுபெயர்
இ) தொழிற்பெயர் ஈ) பண்புத்தொகை

13. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல்
இ) காட்சி ஈ) ஒலி

14. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம்
இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

### பகுதி -2 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. இடையீடு எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
16. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?
17. ஒரு முக எழினி, பொருமுக எழினி குறிப்பு எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்வாறு புலம்பினர்?

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தை குறிப்பிடுக.
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. நால்வகைப் பொருத்தங்கள் யாவை?
23. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
அ) தந்தனன்
ஆ) மறந்து
24. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***
அ) பெருந்தேர்
ஆ) ஏழையென



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. ***கலைச்சொல் தருக.***

1) Arrival 2) Jurisdiction

26. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***

வடமொழியில் காவ்யதர்சம் என்ற நூலைத் தழுவி தமிழ் எழுதப்பட்ட அணியிலக்கண நூல் தண்டியலங்காரம்.

27. ***மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***

அ) சோறு தின்று பழம் உண்டு பால் குடித்தான்

ஆ) சிங்கம் கனைக்கும் நரி கத்தும்

28. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

29. ***பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.***

**ஊண் - ஊன்**

30. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***

அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான

## பகுதி - 3 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

31. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" **- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

33. கடையேழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

34. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்புத் தேடினர்?

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

35. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

37. மயிலை சீனி வேங்கடசாமி நினைவு சிறப்பிதழுக்குச் செய்திகள் தருக.

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x4=12)***

39. அ) பாடாண் திணை சான்று தந்து விளக்குக.

***(அல்லது)***

ஆ) கூதிர்ப்பாசறை துறை சான்று தந்து விளக்குக.

40. அ) 'துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'

***- இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.***

***(அல்லது)***

ஆ) ஏகதேச உருவக அணியை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. ***கீழ்காணும் பெயர்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.***

1) கபிலன் திறமையானவன் என்று __________ (குமரன்) தெரியும்.

2) உங்களுக்கு __________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

3) நேற்று முதல் __________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

4) நம்முடைய __________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

42. ***வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.***

1. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

***(அல்லது)***

2. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

43. ***இலக்கிய நயம் பாராட்டுக.***

***(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)***

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்கனம் வந்ததடா தம்பி வீரா!

-பாரதியார்

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.*** ***(3x6=18)***

44. அ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.

***(அல்லது)***

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு விளக்குக.

***(அல்லது)***

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

***(அல்லது)***

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - 5

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** ***(4+2=6)***

அ) "குழல்வழி" - எனத் தொடங்கும் சிலப்பதிகார பாடல்.

ஆ) "தலை" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com